**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 247-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : சிவராஜ் | Defence | : |
| Father Name | : வீராசாமி | Court | : |
| Village | : திருக்கடையூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 62/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 08.05.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. (u/s 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். மேலும் ஆடு வளர்ப்பு தொழில் செய்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் பகல் நேரத்தில் என் வீட்டில் உள்ள சுமார் 10 ஆடுகளில் ஒரு ஆடு காணவில்லை என்பதால் தேடிப்பார்த்து கிடைக்காததால் பொறையார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அசாஆ 1 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்காததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

கடந்த 04.03.2025 அன்று மதியம் 02.30 மணியளவில் எங்கள் தெருவிற்கு அருகில் உள்ள சாய்பாபா கோவிலுக்கு அருகே ஆடுகளை மேய்த்து விட்டு மர நிழலில் அமர்ந்திருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது அங்கு மேய்ந்திருந்த ஆடுகள் சத்தம் போடவே நான் சென்று பார்த்தபோது யாரோ ஒரு நபர் ஆட்டின் வாயை பொத்தி அவரது தோள் மீது துாக்கி போட்டுக்கொண்டிருந்தார். என்னை பார்த்தவுடன் ஓட ஆரம்பித்தார் என்றால் சரியல்ல. நான் திருடன் திருடன் என சத்தம் போடவே அங்கு உள்ளவர்கள் கூடினர், அதற்குள் ஆட்டை திருடியவன் தப்பித்து சென்றுவிட்டார். பின்னர்

விசாரித்ததில் ஆட்டை திருடியவர் வானகிரி நாகநாதன் கோவில் தெருவை சேர்ந்த நடேசன் மகன் சுரேஷ் என தெரியவந்து அவர் மீது கடந்த 05.03.2025 அன்று பொறையார் காவல் நிலையத்தில் அளித்துவிட்டு மேற்படி சங்கதிகளை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டு எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**